செந்தமிழ்ச் செல்வி

V 22 No 10 5·1·50

50·22·10.
210419

245
REGISTRAR OF BOOKS
23 JAN 1950
MADRAS
245

ओं श्री गुरुभ्यो नमः

மாத்வ மித்திரன்.

THE MADHWA MITRAN.

EDITOR:
Adyam Bhagavatha Ranganathachariar,
KUMBAKONAM.

பௌர்ணமிதோறும் வெளிவரும்.

Vol. 22 புஸ்தகம் 22	விரோதி ஸம்வத்ஸரம் புஷ்ய-மீ 5—1—50' குருவாரம்	No. 10 நெ. 10

ஸ்ரீ பகவத் கீதை.

ஸ்ரீ ம. வே. ஆத்யம் பாகவத ரங்கநாதாசாரியார் எழுதியது.
[காப்பிரைட் ரிஜிஸ்டர்.]
3-வது அத்யாயம்.

(முன் 164-ம் பக்கம் தொடர்ச்சி)

ஆகவே ஸ்வதர்மம்தான் அனுஷ்டிக்கத் தகுந்தது. அந்த அனுஷ்டானமும் பலனில் ஆசைஇல்லாமல் செய்யப்படவேண்டியது. மற்றொரு அர்த்தமும் உண்டு. ஏனெனில் ஸ்வதர்ம: ச்ரேயான். ஸ்வ ஆத்மாவினுடைய தர்ம: தர்மம் என்றால், ஆத்மாவுக்கு ஸுகத்தைத்தருவதான தர்மம். அதாவது க்ஞானம். அதற்கு ஸாதனமான அகாம்யகர்மமும் சரேயான் சிரேஷ்டமானது. எதைவிட என்றால் பரதர்மாத். பர இந்திரியாதிகளுக்கு ஸுகத்தைத்தரும் காம்யமான நிஷித்த கர்மாவைவிட; ஏனெனில் ஸ்வதர்ம: விகுண: குணமயமான ப்ரகிருதி பந்தத்தினின்றும் மேற்கண்ட ஸ்வதர்மம் விடுவிக்ககூடியது. ஆகவே ஸ்வதர்மே நிதனம் ச்ரேய: ஸ்வதர்மத்தில் மரணமும் ச்ரேஷ்டமானது. பரதர்ம: மேற்கண்டபடி பரதர்மம் பயாவஹ: ப்ரகிருதியின்

பந்தகம் தருவதால் பயத்தைத் தருவதாகும். ஆதலால் ஸ்வதர்மமான யுத்தத்தை பலனில் ஆசை முதலியவை இல்லாமல் செய்.

अर्जुनउवाच ।

॥ अथ केन प्रयुक्तोऽयंपापं चरति पूरुषः ॥

अनिच्छन्नपि वार्ष्णेयबलादिवनियोजितः ॥ ३६ ॥

36 அர்ஜுன உவாச।

அதகேன ப்ரயுக்தோயம் பாபம் சரதிபூருஷ:।

அநிச்சன்னபி வார்ஷ்ணேய பலாதிவ நியோஜித:।

அர்ஜுன அர்ஜுனன் உவாச கேட்பதாவது: வார்ஷ்ணேய விருஷ்ணி குலத்திலுதித்த க்ருஷ்ணா! அயம் இந்த பூருஷ: மனிதன் அநிச்சன் அபி பாபகாரியங்களைச் செய்வதில் இச்சை கொண்டிராதிருப்பினும் பலாத் பலாத்காரமாய் நியோஜித: இவ ஏவப்பட்டவனைப்போல் பாபம் பாபத்தை சரதி செய்கிறான். அத பரமாத்மாவைத்தவிர கேன காமக்ரோதாதிகளில் எதனால ப்ரயுக்த: ஏவப்பட்டவனாய் சரதி பாபத்தைச் செய்கிறான்.

அத கிருஷ்ணா: நான் மற்றொருவிஷயம் கேட்கிறேன். "தயோர் நவசமாகச்சேத்" என்று நீர் பின்னடி காமத்வேஷாதிகளுக்கு ஸ்வாதீனமாகலாகாதென்று சொன்னதற்கு, அனுசாரணையாய் இதைக் கேட்கிறேன் என்றும், கருதப்படலாம். இந்த ஜீவன் காமக்ரோதாதிகளில் யாரால் ஏவப்பட்டவனாய் பாபத்தைச் செய்கிறான். அவனை நாம் ஜயித்துவிட்டால் எல்லா சத்ருக்களையும் நாம் ஜயித்துவிட்டதாய் ஆகுமே. இஷ்டம் ஏற்பட்டுதானே, ஒருவன் ஓர் காரியத்தைச் செய்கிறான். விவேகத்தால் பாபம் செய்ய இஷ்டப்படாமல் நின்றுவிடட்டுமே என்பீரோ, அநிச்சன் அபி அவன் இஷ்டப்படாமல் இருக்கும்பொழுதே பாபம்செய்கிறான். அரசனின் கடுமையான உத்தரவுக்கு தான் இஷ்டப்படாமல் இருக்கும்போது கீழ்படிந்து நடப்பதுபோல், யாரோ ஒருவருடைய ப்ரேரணையின்பேரில் இவன் இஷ்டப்படாதிருக்கையில், பாபம் செய்கிறானே! அவன் யார்? இது ஓர் பிரசினம். அத மற்றொரு விஷயம் கேட்கிறேன். ஸ்வகர்மாவை பலனில் ஆசை முதலியவை இல்லாமல் செய்ய

வேண்டும் "நிராசீர்நிர்மமோ பூத்வா யுத்யஸ்வ விகதஜ்வர:" என்று சொல்லப்பட்டது. ராகத்வேஷாதிகள் பலிஷ்டமான ப்ரதிபந்தகங்கள் இருக்கும்பொழுது, உபதேச பலத்தால் அவைகளை நாசம் செய்யமுடியாது. எல்லாவற்றையும் நாசம்செய்ய முடியாவிட்டாலும் அவைகளில் மூலபூதமாய் இருப்பதை நாசம் செய்தாற்போதுமே என்றால், அப்பேர்ப்பட்டது எது என்று இரண்டாவது பிரசினம் எனலாம். அத ராகத்வேஷாதிகளை நாசம்செய்து விஹிதமான அகார்யமான கர்மாவைச் செய்யும்படி சொல்லப்பட்டது. விவேகத்தால் ராகாதிகளை தொலைத்துக் கொண்டாலும் அகாரியத்தில் பிரவிருத்தி ஏற்படுவதால் ராகாதிகளைவிட வேறொருவன் ப்ரேரகன் இருப்பதாய் தோன்றுகிறது. அவன் யார் என்று மூன்றாவது பிரசினம். அத என்பதற்கு அநந்தரம் பிறகு என்று அர்த்தம் உண்டு. ராகத்வேஷாதிகளை தொலைத்துக்கொண்ட பின்பும் இஷ்டப்படாமல் இருக்கும்பொழுதே, பாபகர்மாவைச் செய்கிறான். யாரால் பிரேரிபிக்கப்பட்டு அவன் அதைச் செய்கிறான். ஈசுவரன், தேவர்கள், காமாதிகள் ப்ரேரகர்கள் என்று "ப்ரகிருதே: க்ரியமாணானி, தௌஹ்யஸ்ய பரிபந்திநௌ" முதலான சுலோகங்களால் அறிவிக்கப்பட்டது. அவர்களில் அத ஈசுவரனுக்குப்பின், தேவர்களுக்குப் பின், யாரால் பிரேரிக்கப்பட்டு பாபத்தை இவன் செய்கிறான். என்று நான்காவது பிரசினம். "ஸத்ருசம் சேஷ்டதே ஸ்வஸ்யா: ப்ரகிருதே:" என்று ப்ரகிருதியின் வாஸனை ப்ரவ்ருத்திக்கச் செய்யும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. வாஸனை என்பது இச்சையின் மூலமாகத்தான் ப்ரவிருத்திக்கிறது என்று எமது அனுபவத்தில் இருக்கிறது. விஷயானுபவத்தின் இச்சையே இல்லாதிருக்கையில் எதை மூலமாக வைத்துக்கொண்டு அந்த வாஸனை ப்ரவிருத்திக்கும். இது ஐந்தாவது பிரசினம். இதற்கெல்லாம் ஸ்ரீ க்ருஷ்ணா! பதில் சொல்லும்.

॥ श्रीभगवानुवाच ॥

॥ काम एष क्रोधएष रजोगुण समुद्भवः ॥

महाशनो महापाप्मा विद्धेनमिह वैरिणम् ॥ ३७ ॥

37 பகவான் உவாச|
காம ஏஷக்ரோத ஏஷரஜோகுணஸமுத்பவ:|
மஹாசனோ மஹாபாப்மா வித்யேன மிஹவைரிணம் ||

பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் உவாச சொல்வதாவது :—ஏஷ: இந்த ஜனங்களை பாபம் செய்ய ப்ரவிருத்திப்பது காம: காமம் தான். ஏஷ: இந்த காமம்தான் க்ரோத: கோபம் ஏஷ: இந்த காமம் ரஜோகுணஸமுத்பவ: ரஜோகுணத்தால் பிறந்தது. மஹாசன: மஹத்தான போக்ய விஷயங்களைக்கொண்டது. மஹாபாப்மா மகத்தான பாபத்திற்கு காரணமானது. இஹ ஐஹிக ஆமுஷ்மிக புருஷார்த்தங்களை அடையும் விஷயத்தில் ஏனம் இந்த காமத்தை வைரிணம் சத்ருவென்று வித்தி தெரிந்துகொள்.

ஏஷ: அர்ஜுனா! கேனப்ரயுக்த: என்று கேட்கப்பட்டவனை அப்பேர்பட்ட பலவான் யாரென்றால் காம: காமம்தான் நாம் விரும்பாமல் இருந்தபோதும் நம்மை அகார்யத்தில் பிரவிருத்திக்கச்செய்வதாகும். காமம் என்றால் பலிஷ்டமான இச்சை காமக்ரோதிகளில் பலிஷ்டமானது எது என்று கேட்டதற்கு முந்திய சுலோகத்தில் உள்ள 1, 2, 4 பிரச்னங்களுக்கு காம: ஏஷ: காமம்தான் பலிஷ்டமானது என்று பதில் சொன்னதாயும் பொருள்படும். இஷ்டமில்லாமல் இருப்பவனுக்கு ப்ரவிருத்திக்கச்செய்வது இஷ்டம் காமம், என்றால் எப்படி பொருந்தும்? இஷ்டமில்லாமல் இருப்பவனிடம் ப்ரவிருத்திக்கும்படியான இஷ்டமே எப்படி இருக்கக்கூடும்? என்றால் ஏஷ; ரஜோகுணஸமுத்பவ: இந்த காமம் என்பது ரஜோகுணத்தால் பிறந்தது. ஸத்வம், ரஜஸ், தமஸ் என்று ப்ரகிருதியின் குணங்கள் மூன்று. அவைகள் மூன்றும் ஒன்றுசேர்ந்து காரியத்தை ப்ரவர்த்திப்பதில்லை. ஏனெனில் அவைகள் மூன்றும் ஒன்றுக்கொன்று முரண்பட்டவைகள். "ரஜஸ்தமஸ் அபிபூய ஸத்வம் பவதி பாரத| ரஜஸ்ஸத்வம் தமஸ் சைவதமஸ் ஸத்வம் ரஜஸ்ததா" என்று பின்னாடி சொல்லப்படும். ரஜஸ்தமஸ் அதிகமாகவுள்ளவனுக்கு, ஏதோ ஒரு காரணத்தால் ஸத்வகுணம் அல்பமாயிருக்க அதனால் ஸத்காரியம் செய்ய இச்சை உண்டாகிறது.

(தொடரும்)

ஸ்ரீ விஜயீந்திரஸ்வமிகளின் சரித்திரம்.

(முன் 151-ம் பக்கம் தொடர்ச்சி)

சூரியோதயம் ஆயிற்று. அன்று சூரியன் வெகு பிரகாசமாய் ஜொலிப்பதாய் ஆஸ்திகர்கள் எண்ண ஆரம்பித்தனர். எங்கும் எந்த இருளும் இல்லை என்று தோன்றியது ஆஸ்திகர்கள் இன்று முதல் எங்களுக்கு நற்காலம் ஏற்படப்போகிறது என்று ஸ்திரீபுமான்கள் பாலர்கள் விருத்தர்கள் யாவரும் குதூஹலம் அடைந்தனர். அவரவர்கள் நீராடி அவரவர்களின் ஜாதிமதங்களுக்குறிய புண்ட்ரங்களை தரித்துக்கொண்டு கும்பகோணத்தின் மத்ய பாகத்திலுள்ள ஆதிகும்பேசுவரரின் தேவாலயத்தின் சமீபத்தில் தெற்கு ரத வீதியிலுள்ள லிங்காயதர்களின் மடத்து வாசலில் கூடினர். நாழிகை ஆக ஆக அப்பெரிய தெரு முழுதும் ஜனங்கள் நிறைந்து விட்டனர். ஆயிரக்கணக்காய்கூடி விட்டனர். ஸ்ரீ விஜயீந்திர ஸ்வாமிகளும் தமது ஸ்நானாஹ்நிகங்களை முடித்துக்கொண்டு தம் மடத்தின் பரிவாரங்களையும், துருப்பு சிப்பாய்களையும் அழைத்துக்கொண்டு, மேனாவில் தம்முடைய ஸ்வாமிபெட்டியை வைத்துவிட்டு, தாம் கால்நடையாய் சத்ரசாமராதி வைபவங்களுடன் பிராம்மணர்களின் வேத கோஷத்துடன் அந்த லிங்காயத மடத்தின் வாசலுக்கு வந்தார். சிறிது நேரம் நின்றார். முதல் நாள் தம்முடன் பேசி தமக்கு பக்க பலமாய் இருந்த கும்பகோணத்தின் பல முக்யஸ்தர்களும் மற்றும் பல தனவான்களும் ஸ்ரீ விஜயீந்திர ஸ்வாமிகளுக்கு நமஸ்காரம்செய்து சமீபத்தில் நின்றனர். "வாசலில் நாம் ஏன் நிற்கவேண்டும் உள்ளே போவோம்" என்று ஜனங்கள் கோஷமிட்டனர். எப்போதும்போல் இல்லாமல் அந்த லிங்காயத மடத்தின் வெளிவாசல் கதவு சாத்தப்பட்டிருந்தது. சாத்தின கதவை தட்டும்படி ஸ்ரீ விஜயீந்திரர் கூட இருந்தவர்களை ஆக்ஞாபித்தார். ஜனங்கள் ஒரே கூட்டமாய் அந்த கதவைத் தள்ளவும் சாதாரணமாய் சாத்தப்பட்ட கதவு ஸம்பூர்ணமாய் திறந்து போயிற்று. முதல்நாள் கூடியிருந்த இடத்திலேயே மகா

ஜனங்கள் கூடினர். ஸ்ரீ விஜயீந்திரரும் அதே இடத்தில் உயர்ந்த ஆஸனத்தில் அமர்ந்தார். நாற்புறமும் பார்த்தார். ஓர் லிங்காயதரையும் காணவில்லை. தமது சிப்பாயை மடத்தினுள்ளேபோய் லிங்காயதர் எவரையாவது அழைத்துவரும்படி ஆக்ஞாபித்தார். அவ்வாறே அந்த சிப்பாயும் மடத்தினுள்ளே சென்றான். ஒவ்வொரு கட்டினும் சென்றான். எங்கும் யாரையும் அவன் காணவில்லை. சப்தமசெய்து பார்த்தான. கூப்பிட்டுப்பார்த்தான். எங்கிருந்தும் எந்த சப்தமும் கேட்கப்படவில்லை. ஒருவராவது அவ்வளவு பெரிய மடத்திற்குள் இருப்பதாய் தெரியவில்லை. ஜனநடமாட்டம் சிறிதும் இல்லை என்று நிச்சயம் கொண்டான். தான் தெரிந்துகொண்டதை மற்றும் எல்லா இடங்களிலேயும் தேடி உறுதிசெய்துகொண்டான். வெளிப்புறத்து கட்டில் கூடியிருந்த. தம் அதிபதி ஸ்ரீ விஜயீந்திர ஸ்வாமிகளிடம் வந்து அடிப்பணிந்து "ஸ்வாமின்! மடம் காலியாய் இருக்கிறது. மடத்தின் உள்ளே ஒருவரும் இல்லை ஆங்காங்கு இம் மடத்தாரின் சாமான்களும் காணப்படுகின்றன. காணக்காண ஆச்சரியமாகவே இருக்கிறது" என்றான். இதைக்கேட்டு ஸ்ரீ விஜயீந்திரரும் அங்கு கூடியிருந்த ஆயிக்கணக்கானவர்களும் ஆச்சரிய ஸமுத்ரத்தில் மூழ்கினர். கூட்டத்தில் ஒவ்வொருவர் ஒவ்வொரு வகையாய் லிங்காயத குருவை ஏசிப்பேசினர். நகரின் முக்யஸ்தர்கள் ஒருவருக்கொருவர் முகத்தைப்பார்த்து சிரித்துவிட்டு "ஸ்ரீ விஜயீந்திரகுரோ! தங்கள் அபார சக்தியை என்னவென்று உரைப்போம். இந்நகரை சென்ற பலவருஷங்களாகவே அரசனைப்போல் கைப்பற்றி, வேதத்தில் பற்றுள்ளவர்களை தலைதூக்கவொட்டாமல், அட்டூழியம் செய்துவந்த லிங்காயதகுருவை, ஓர் நொடியில் இருந்த இடம் தெரியாமல் செய்த தங்கள் அபார மகிமையை நாம் எல்லோரும் மிகவும் பாராட்டுகிறோம். இப்போது தங்களுடன் வாதம் செய்யாமலும், தன் லிங்காயத மதத்தை ஸ்தாபிக்காமலும் தாங்கள் இம் மடத்திற்கு வரும் காலத்தை அறிந்து, இந்த கட்டிடத்தில் இல்லாமல் மறைந்துவிட்டதன் நிமித்தம்,

கட்டிடத்தை தாங்களே அவர்மீது சம்பாதித்த ஜயத்தின் அறிகுறியாக எடுத்துக்கொள்ளவேண்டுமென்பது அவருடைய அபிப்பிராயம் என்றே சொல்லலாம். சாமானியமாக ஒருவரை ஒருவர் வாதத்தில் ஜயித்தால், ஜயித்தவர் தோற்றுப் போனவரிடமிருந்து ஜயபத்ரிகையை கைப்பற்றுவது வழக்கம் லிங்காயதகுருவை தாம் ஜயித்துவிட்டதால் ஜயபத்ரிகையின் ஸ்தானத்தில் அவரிடத்தில் இருந்த அவருடைய 6 கட்டுகள் கொண்ட அரண்மனைக்கொப்பான பிரம்மாண்டமான லிங்காயத மடாலயத்தை கைப்பற்றிக்கொண்டுவிட்டீர்கள். இனி இந்த மடாலயம் பூராவும், இதிலுள்ள விக்னேசுவரர் முதலான தேவாலயங்கள், தற்போது ஆங்காங்கு விட்டுப்போயிருக்கும் அம் மடத்தின் சம்பந்தமான பலவகை சாமான்கள், லிங்காயத குருவுக்கு கும்பேசுவரர் தேவாலயத்தில் இருக்கும் பாத்யதைகள் மற்றும், அவருடைய இதர சுதந்திரங்கள் எல்லாம் தங்களுக்கே சொந்தமாகும். தாங்கள் அவரை ஜயித்து அரசன் எதிரியின் ராஜ்யத்தை கைப்பற்றி பாக்யமடைவது போல், இன்றுமுதல் தாம் அவைகளின் பாத்யதையை அடைந்துவிட்டீர்கள் இந்நகர் மகா ஜனங்கள் முக்யஸ்தர்கள் எல்லோரும் இதை ப்ரத்யக்ஷமாய் பார்த்துக்கொண்டிருப்பதால் நாம் முற்றிலும் ஆமோதிக்கிறோம். தாங்கள் ஸ்வாதீனமாக்கிக்கொள்வதை அனுமதிக்கிறோம். பகவத்ஸங்கல்பத்தின்படி தங்களுடன் இச்சமயம் தங்கள் பூஜாபெட்டியே யாதோ ஒரு காரணத்தால் கொண்டுவரப்பட்டிருக்கிறது இனி இந்த பூஜா பெட்டி இங்கேயே இருக்கட்டும். இன்று இங்கேயே பூஜை நடந்து பிராம்மண போஜனம் நடக்கட்டும். என்று விஸ்தாரமாய் ஒருசிலர் அறிவித்தனர். எல்லோரும் கரகோஷம் செய்து ஸ்ரீ விஜயீந்திரருக்கு ஏற்பட்ட இந்த ஜயம் ஒவ்வொருவருக்கும் ஏற்பட்ட ஜயமாகவே கருதினர். ஆஸ்திகர்கள் தமக்கு பிஷத்திருந்த பீடை தொலைந்ததே என்று ஆனந்த ஸமுத்ரத்தில் மூழ்கினர். ஸ்ரீ விஜயீந்திரர் முக்யஸ்தர்களுடன் பிரம்மாண்டமான அந்த கட்டிடத்தை உட்புகுந்து பார்வையிட்டார். (தொடரும்)

ஸ்ரீ ஜகந்நாததாஸர் இயற்றிய ஹரிகதம்ருதஸாரம்.

(முன் 100-ம் பக்கம் தொடர்ச்சி)

16 தேவர்கள் தைத்யர்கள் இவர்களின் தாரதம்யத்தை மேலே சொன்னபடி அறிந்துகொண்டு லக்ஷ்மீபதியான நாராயணனே ஸர்வர்களிலும் உத்தமன் எல்லா ப்ராணிகளிடமும் வியாபித்து இருக்கிறான் என்று அறிந்துகொண்டு அவரை தினமும் ஸேவிதிடும் பக்தர்களுக்கு ப்ரஸன்னராய் ஆனந்தமயராய் லக்ஷ்மிபிரம்மாதிதேவர்களால் துதிக்கப்பெற்றவராயுள்ள ஸ்ரீ ஜகந்நாத தாஸரின் ப்ரியரான ஜகந்நாதவிட்டலர் பகவான் இகத்திலும் பரத்திலும் ஸுகத்தைத் தந்தருள்வார்.

ஸ்ரீ ஜகந்நாததாஸர்வாள் இயற்றிய ஸ்ரீ ஹரிகதாம்ருதஸாரத்தில் 21வதான அணுதாரதம்ய ஸந்தி ஸம்பூர்ணம்.

ஸ்ரீ கிருஷ்ணார்ப்பணமஸ்து.

22-வது ப்ருஹத்தாரதம்யஸந்தி.

---

1. ஸ்ரீஹரி, மகாலட்சுமி, சதுர்முகன் வாயுபகவான், முதலான தேவர்களின் அம்சங்கள் அவதாரங்களேயும் அவர்களின் குண கணங்களையும் நீ எப்போதும் பக்திபூர்வமாய் ஸ்மரணம் செய்வாய். மத்ஸ்யம், கூர்மம், வராஹம், நரஸிம்ஹம, ப்ரம்மசாரியான வாமனர், பரசுராமர், தசரத குமாரரான ராமர், யர்தவராய் பிறந்த கிருஷ்ணர். புத்தர். கல்கி, கர்த்தம ப்ரஜேசுவரரால் தேவஹூதி தேவியிடம் பிறந்த கபிலர், சுப்ரர் என்னும் மகரிஷியால் அவருடைய பத்னியான விகுண்டாதேவியிடம் பிறத்த வைகுண்டர், வேதவியாஸர், நாபிராஜனல் மேருதேவியிடம் பிறந்த ரிஷபர், ஹயக்ரீவன் என்னும் அஸுரனைக் கொன்ற ஹயக்ரீவர், அஸுரர்களை மோகித்து தேவர்களுக்கு அமிர்தபானம் செய்வித்த மோகினி ரூபங்கொண்ட நாராயணி, பிரம்மாவுக்கு அவருடைய சபையில் தத்வோபதேசம் செய்த ஹம்ஸர், வாஸுதேவாதி

ஐந்து வ்யூஹரூபங்களில் சேர்ந்த அநிருத்தர், மூன்று லோகங்களையும் அளந்த திரிவிக்ரமர், மகாலட்சுமியை வக்ஷஸ்தலத்தில் தரித்த ஸ்ரீதரர், இந்திரியங்களுக்கு அபிமானியாய் சரீரத்தினில் இருக்கும் ஹ்ருஷீகேசர். (2) ஹரிமேதஸ் என்பவரால் ஹரிணி தேவியிடம் பிறந்தவரான கஜேந்திரனை சம்ரக்ஷித்த ஹரி, தர்ம ப்ரஜேசுவரரால் ஸுநிருதாதேயிடம் பிறந்தவரான நர நாராயணர்கள் இருவர்களில் நாராயணர், அஸுரஸமூகங்களை சம்ஹரித்தவரான கிருஷ்ணர், ஆகிய இப்பேர்ப்பட்டவரான பரமாத்மா, ஸுர்யனுக்கு ஸமானமான காந்தியுள்ளவர். தோஷமில்லாத ஸுகம்பரிபூர்ணர், ஸர்வதேவோத்தமர். எங்கும் வியாபித்தவர். புருஷர்களில் ச்ரேஷ்டர். அநாதிகாலமாய் இருப்பவர். ஜராமரணமில்லாதவர். வாஸுதேவாதி அநந்தாவதாரமுள்ளவர் என்று இவ்வாறு எல்லா சாஸ்திரங்களிலேயும் ப்ரசித்தமானவர். (3) கமலத்தினின்றும் உற்பவித்தவரான பிரம்மாவின் தாயான மகாலட்சுமி ப்ரளயம் முதலான எல்லாகாலங்களிலேயும் ஸ்ரீ ஹரியின் கிருபையின் பலத்தால் க்ஞானம் பலம் பக்தி முதலான குணங்கள் நிறைந்தவள். இவள் இதரர்களான பிரம்மா முதலான தேவர்களைவிட மிக்க அதிகமான ஸம்பூர்ண க்ஞானம் பலம் பக்தி முதலானவைகள் நிறைந்தவள். ஆனல் புராண புருஷனை நாராயணருக்கு அநந்தாநந்த குணங்களால் குறைந்தவள். இப்போது முக்தியடைந்திருக்கும் தேவர்களிலேயும் சரியே, இனி முக்தர்களாகப் போகும் தேவர்களிலேயும் சரியே. ப்ரகிருத்திக்கு அபிமானியான இந்த மகாலட்சுமிதேவியாருக்கு ஸமானர்கள் எனப்படுபவர்கள் யாவரும் இல்லை. (4) இவள் ஸத்வம், ரஜஸ் தமஸ் எனப்படும் மூன்று குணங்களுக்கு அபிமானி. வராஹமூர்த்திபகவானின் பத்னியாக ஸ்ரீ கும்பினி என்று அவதரித்தவள். ருத்திராந்தர்கத நாராயணின் பத்னி மஹா துர்க்கை என்றும், வேதாபிமானி அம்பாணி என்றும், ஸ்ரீ கிருஷ்ணரின் பாரியாள் ருக்மணி ஸத்யபாமா என்றும் அநிருத்தமூர்த்தியின் பாரியாள் சாந்தி என்றும், ப்ரதியும்ன மூர்த்தி

யின் பாரியாள் கிருதி என்றும், ஸங்கர்ஷண மூர்த்தியின் பாரியாள் ஜயா என்றும், வாஸுதேவமூர்த்தியின் பாரியாள் மாயா என்றும், நாராயணனின் பாரியாள் மகாலட்சுமி என்றும், ராமருடைய பாரியாள் சீதை என்றும், அஜிதமூர்த்தியின் பாரியாள் கமலாலயா என்றும், யக்ஞமூர்த்தியின் பாரியாள் தக்ஷிணா என்றும், த்ரிலோகத்துக்கு ஈசுவரியான மகாலட்சுமி இவ்வாறெல்லாம் எண்ணப்படுவாள். இவள் அணுவிலும் அணுவாயும் மஹத்திலும் மஹத்தாயும் இருந்து இவளுக்கு இணை இல்லை என்று அழைக்கப்படுவாள். "இத்யாதிகாஹ்ய நந்தாஸ்ச ஹ்யவதாரா: ப்ருதக்விதா:। ரமாயா:ஸந்தி பக்ஷீந்த்ர பேதஹீனா: பரஸ்பரம்" என்கிறது பிரமாணம் (5) ஹயக்ரீவாவதாரம் செய்த ஸ்ரீமந்நாராயணரின் பத்னியான மகாலட்சுமியைவிட பிரம்மா வயுபகவான் இவ்விருவர்கள் எப்போதுமே கோடிகுணங்களால் தாழ்ந்தவர்கள். லக்ஷ்மீபதியின் கிருபாகடாக்ஷத்தால் பக்ஷிச்ரேஷ்டரான கருடன், சேஷன் மகேந்திரன் இவர்களை லக்ஷியம் செய்யாமல் எல்லா ப்ராணிகளிடமும் இருந்து ஸமஸ்தமான இந்திரியங்களின் காரியங்களையும் நடத்துகின்றனர். (6) வாஸுதேவ மூர்த்தியால் மாயாதேவியிடம் ஸூக்ஷ்ம சரீரத்துடன் ஜனித்த புருஷன் எனப்படுவரும் காலன் எனப்படுபவரும் அநிருத்த மூர்த்தியால் சாந்திதேவியிடம் பிறந்தவரான மகத்தத்வாபிமானியானவிரிஞ்சி எனப்படுபவரும்நாராயணருடையநாபிகமலத்தில் பிறந்த சதுர்முகனும் பிரம்மாவின் நான்கு ரூபங்கள். "ரூபைஸ்சதுஷ்டயை ஸ்சைவ ப்ரம்மண: பரமேஷ்டின:" என்கிறது பிரமாணம். வாயுபகவானின் ரூபங்கள் நாற்பத்தி ஒன்பது மருத்தர்களில் உத்தமரூபமான முக்யப்ராணர். எல்லா ப்ராணிகளுக்கும் ப்ராணபூதமாய் இருப்பவர். மிக்கதைரியத்துடன் பகவத் ஸ்மிருதி செய்பவராதலால் த்ருதி எனப்படுவார்.

(தொடரும்)

தாரதம்ய ஸ்தோத்திரம்.

(ஸ்ரீ கல்யாணிதேவி இயற்றியது.)

(முன் 169-ம் பக்கம் தொடர்ச்சி)

11. ப்ரவஹ: முக்யவாயுவின் பிள்ளை. வாயு மூலைக்கு அதிபதியானவன் ப்ரவஹவாயு என்று பெயர்கொண்டவன். நாஸிக்ய வாயு என்றும் சொல்லப்படுகிறான். ஆதிவாஹிகன் யுயுத்ஸு என்றும் அழைக்கப்படுவார். பூதத்திற்கு அபிமானி புத்திதத்வத்தால் வியாபித்தவன். சரீரத்தில் 22 லக்ஷணங்களைக் கொண்டவன்.

12. யம: மானவீ, சந்த்ரஸூர்யௌ யமன் தக்ஷிணதிக்குக்கு அதிபதி. தர்மதேவதையானதால் யமதர்மன் எனப்படுவான். பிரம்மாவின் அம்சம் பெற்று ஜாம்பவனாகவும் கிருஷ்ணாவதாரகாலத்தில் விதுரனாகவும் துருபதனின் மகன் ஸத்யஜித்தாகவும் அவதாரமெடுத்தவன். மானவீ ஸ்வாயம்பு மனுவின் பத்னீ. சதரூபாதேவி எனப்பெயர்கொண்டவள். பிரம்மாவின் சரீரத்திலிருந்து முதல்மன்வந்தரத்திலேயே ஜனனமெடுத்தவள். ப்ரியவ்ரதன உத்தானபாதன இவர்களின் தாய். சந்திரன் அத்ரிஷியின் பிள்ளை சந்திரமண்டலத்திற்கு அதிபதி. 27 நக்ஷத்திர தேவதைகளுக்கு பர்த்தா. புதனின் தந்தை. ராமாவதாரகாலத்தில் அங்கதனாய் பிறந்தவன். சூரியன் கசியபரின் பிள்ளை யமன சனி இவர்களின் தந்தை. ராமாவதாரகாலதில் ஸுக்ரீவனாகவும் கிருஷ்ணாவதாரகாலத்தில் கர்ணனாகவும் அவதாரமெடுத்தவன். இந்த நால்வர்களும் ஸமானர்கள். சக்ஷுஸ்தத்வத்திற்கு அபிமானிகள். மனஸ்தத்வம் வ்யாபித்தவர்கள். சரீரத்தில 21 லக்ஷணங்களைக் கொண்டவர்கள்.

13 அப்: ஜலாதிபதியான வருணன். மேற்கு திசைக்கு பாலகன். கங்காதி நதிகள் அவருடையபத்னிகள் எனப்படுவார்கள். ஸமுத்ரராஜன் என்றும் இவருக்கு பெயர் உண்டு. மண்டூக ரூபமுடன் பகவானை துதித்திருக்கிறார். ராமாவதார காலத்தில் ஸுஷேணன் என்னும் வானரனாகவும் கிருஷ்ணாவதாரகாலத்தில் ஸூர்யவம்சத்தில் மகாபிஷக்ராஜன் என்றும் சந்திரவம்சத்தில் சந்தனுவென்றும் ஆக இவனுக்கு நான்கு அவதாரங்கள் உண்டு.

அப், ஜிஹ்வா தத்வங்களுக்கு அபிமானி. சரீரத்தில் 20லக்ஷணங்களைக் கொண்டவன்.

14. நாரதர் பிரம்மாவின் தொடையினின்றும் பிறந்தவர். தேவரிஷியானவர். உபபர்ஹணன் என்று கந்தர்வனாயிருக்கையில் சாபத்தால் சூத்ரனாய் ஆனவர். வருணனுக்கு குறைந்தவர்.

15. பிருகு: அக்னி: ப்ரஸூதி|பிருகு முனிவர். பிரம்மாவின் மனஸ்ஸினின்றும் பிறந்தவர். சிவபக்தர்களுக்கு சாபத்தைக் கொடுத்தவர். விஷ்ணுதான் ஸர்வோத்தமர் என்று உலகில் பிரசித்தம்செய்தவர். நாராயணனை பாதப்ரஹாரம் செய்ததால் ஜரா என்னும் வேடனாய் பிறந்தார். அக்னி அநலகுலேந்த்ர: என்று சொல்லப்பட்டிருக்கிறது. அக்னி வம்சம் விஸ்தாரமானது. அதில் இவர் முக்யமான அக்னி என்று சூசிக்கப்பட்டிருக்கிறது. ராமாவதார காலத்தில் ராமரின் பிள்ளை லவன் என்றும் நீலன் எனப் பெயர்பெற்ற கபியாகவும் கிருஷ்ணாவதாரகாலத்தில் த்ரௌபதியின் சகோதரனை த்ருஷ்டத்யும்னனாகவும் அவதாரமெடுத்தவர். ப்ரஸூதி: தக்ஷப்ரஜேசுவரரின் பத்னி. ஸ்வாயம்புமனுவின் பெண், அவளுக்கு 16 பெண்கள். தர்மப்ரஜேசுவரருக்கு விவாகம் செய்துகொடுத்த அந்த பெண்களில் ஒருவளான மூர்த்தி தேவியிடம் நாராயணர்கள் அவதாரம் செய்தார்கள். இம்மூவர்களும் வாக்கு, தேஜஸ் தத்வங்களுக்கு அபிமானிகள், சரீரத்தில் 19 லக்ஷணங்களைக்கொண்டவர்கள்.

19. விச்வாமித்ரர், ஸப்தரிஷிகள். வைவஸ்வதமனு :— விச்வாமித்திரர் ராமருக்கு முதலில் வித்யாப்யாஸம் செய்துகொடுத்தவர். சந்திரவம்சத்தில் காதிராஜனின் பிள்ளை, க்ஷத்திரியனாக இருந்து தவத்தால் பிரம்மரிஷியானவர். அவருடைய பெண் சகுந்தலையிடம் இந்தகண்டத்தின் அதிபதி பரதராஜன் பிறந்தான். ஸப்தரிஷிகள் சதுர்முகனின் குமாரர்கள். மனதிலிருந்து பிறந்தவர் மரீசி, கண்களினின்றும் பிறந்தவர் அத்ரி. முகத்திலிருந்து பிறந்தவர் அங்கிரஸ், நாபியிலிருந்து புலஹர், கையிலிருந்து க்ரது. ப்ராணனிடமிருந்து வசிஷ்டர், காதிலிருந்து புலஸ்த்யர். ஆகிய ஏழு மகரிஷிகள். இவர்கள் உலகில் தர்மஸ்தாபகர்கள் தர்மப்ரவர்த்தகர்கள். நிலப்ரளயகாலத்தில் பூமி கப்பலாய் மாறுவதும் அதில் இவர்களுக்கு மத்ஸ்யரூபி பகவான் உபதேசம் செய்வதும் பிரசித்தம். (தொடரும்)

ஸ்ரீ ராகவேந்திர ஸ்வாமிகள் கிருபாவிலாஸ ஸங்கம்.

கும்பகோணம். (கிளை) நாச்சியார்கோவில்.

மாத்வமித்திரன் ஆசிரியர் ஸ்ரீமான் ஆக்யம் பாகவத ஸங்கனாதாசாரியாரால் இச் சங்கத்தில அநேக சிறுவர் சிறுமிகளுக்கு போதிக்கப்பட்டு, பல இடங்களில் பெருங் கூட்டத்தாரும் மிக்க கவனத்துடன் ரஸிக்கும்படியாய் இருந்துவரும், பகவத் ஸ்தோத்திர பாடங்கள், மாத்வ உலகில் பற்பல ஊர்களில் இருந்துவரும் மாத்வ சங்கங்கள், மாத்வ வாசகசாலைகள், ஆஞ்சனேய தேவாலயங்கள், பிருந்தாவனங்கள் முதலானவைகளின் அதிகாரிகள், ஆங்காங்கு பாலர்களுக்கு இவ்வாறே போதிக்கச் செய்து மதப்ரசாரம் செய்யப்பட உதவுவதற்காக, அடியிற்கண்ட ப்ரதம போதனமுறை ப்ரசாரம் செய்யப்பட்டிருக்கிறது. தனிப் புத்தகம் சீக்கிரமே மாத்வமித்திரன் காரியாலயத்தில் விலைக்கு கிடைக்கும். விபரம் பின்னடி விளம்பரம் செய்யப்படும்.

பாலர் ஸ்தோத்திரம்.

ஓம் ஸ்ரீ குருப்யோநம :

1. சுக்லாம்பரதரம் விஷ்ணும் சசிவர்ணம் சதுர்புஜம் [1] |
ப்ரஸன்னவதனம் த்யாயேத் ஸர்வ விக்னோபசாந்தயே ||
2. ஏகதந்தம் சூர்ப்பகர்ணம் கஜவக்த்ரம் சதுர்புஜம் |
பாசாங்குசதரம் தேவம் த்யாயேத் ஸித்திவிநாயகம் |
3. வக்ரதுண்ட மஹாகாய சூர்யகோடி ஸமப்ரப |
நிர்விக்னம் குருமேதேவ ஸர்வகார்யேஷு ஸர்வதா |
4. கராக்ரேவஸதே லக்ஷ்மீ: கரமூலே ஸரஸ்வதி [2] |
கரமத்யே து கோவிந்த: ப்ரபாதே கரதர்சனம் ||
5. கபிலாம் தர்ப்பணம் பானும் பாக்யவந்தம் ச பூபதிம் |
ஆசார்யம் அன்னதாதாரம் ப்ராத: பச்யேத் பதிவ்ரதாம் |
6. அஹல்யா த்ரௌபதீ ஸீதா தாரா மண்டோதரீ ததா |
பஞ்சகன்யா: ஸ்மரேத் நித்யம் மஹாபாதகநாசனம் |

---

1 கணபதி ஸ்தோத்திரம் 2 காலைவந்தனம்.

7. அசுவத்தாமா பலிர்வ்யாஸ: ஹனுமாம்ஸ்ச விபீஷண:|
க்ருப: பரசுராமஸ்ச ஸப்தைதே சிரஜீவின:|

8. அச்யுதானந்தகோவிந்த நாமோச்சாரணபேஷஜாத்|
நச்யந்தி ஸகலாரோகா: ஸத்யம் ஸத்யம் வதாம்யஹம்||

9. [3] ஆபதாமபஹர்த்தாரம் தாதாரம் ஸர்வஸம்பதாம்|
லோகாபிராமம் ஸ்ரீராமம் பூயோ பூயோ நமாம்யஹம்|

10. ஹரேராம ஹரேராம ராமராம ஹரே ஹரே|
ஹரேக்ருஷ்ண ஹரேகிருஷ்ண க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே|

11. ராமாயராமபத்ராய ராமசந்த்ராய வேதஸே|
ரகுநாதாய நாதாய ஸீதாயா: பதயே நம:|

12. மாதாராம; மத்பிதா ராமசந்த்ர:|
ப்ராதா ராம: மத்ஸகா ராமசந்த்ர:|
ஸர்வஸ்வம்மே ராமசந்த்ரோ தயாலு|
நான்யம் தெய்வம் நைவஜானே நஜானே|

13. வைதேஹீஸஹிதம் ஸுரத்ருமதலே ஹைமேமஹாமண்டபே|
மத்யே புஷ்பகமாஸனே மணிமயே வீராஸனே ஸம்ஸ்திதம்|
அக்ரேவாசயதி ப்ரபஞ்ஜன ஸுதே தத்வம் முனிப்ய: பரம்|
வ்யாக்யாந்தம் பரதாதிபி: பரிவ்ருதம் ராமம் பஜேச்யாமளம்|

14. [4] க்ருஷ்ணாய வாஸுதேவாய தேவகிநந்தனாய ச|
நந்தகோப குமாராய கோவிந்தாய நமோநம:|

15. க்ருஷ்ண: கரோது கல்யாணம் கம்ஸகுஞ்ஜரகேஸரீ|
காளிந்திஜலகல்லோல கோலாஹல குதூஹலீ|

16. திவாஸவ்ருக்ஷஸ்ஸாதூனும் ஆபன்னனும் பராயணம்|
பக்தார்த்தி பஞ்ஜன: ஸ்ரீமான் க்ருஷ்ண ஏவகதிர்மம|

17. [5] பர்ஜனம் பவபீஜானும் ஸர்ஜனம் ஸர்வஸம்பதாம்|
தர்ஜனம் யமதூதானும் ந்ருஹரேர் நாமகர்ஜனம்|

18. உதயரவிஸஹஸ்ர த்யோதிதம் ருக்ஷவீக்ஷம்|
ப்ரளய ஜலதிநாதம் கல்பக்ருத்வன் ஹிவக்த்ரம்|
ஸுராதி ரிபுவக்ஷ: சேதரக்தோக்ஷிதாங்கம்
ப்ரணதபயஹரம் தம் நாரஸிம்ஹம் நமாமி|

3 ராமர். 4 க்ருஷ்ணர். 5 நரஸிம்ஹர்.

19. [6] நமோஹனுமதே ராம தீமதே ஜிதகாமதே|
மமேஷ்டம் தததே ஸீதாக்ருதே சத்ருஜிதே ஸதே|

20. புத்திர்பலம் யசோதைர்யம் நிர்பயத்வமரோகதா|
அஜாட்யம் வாக்படுத்வம் சஹனுமத்ஸ்மரணாத் பவேத்|

21. அஞ்ஜனாநந்தனம் வீரம் ஜானகிசோகநாசனம்|
கபீசமக்ஷஹந்தாரம் வந்தே லங்காபயங்கரம்|

22. [7] யாகுந்தேந்து துஷாரஹாரதவளா யா சுப்ரவஸ்த்ராவ்ருதா
யாவீணாவரதண்டமண்டிதகரா யா ச்வேத பத்மாஸனா|
யாப்ரும்மாச்யுதசங்கர ப்ரப்ருதிபி: தேவை ஸ்ஸதாபூஜிதா
ஸாமாம் பாது ஸரஸ்வதீ பகவதீ நிச்சேஷஜாட்யாபஹா|

23. ஸரஸ்வதி நமஸ்துப்யம் வரதே காமரூபிணி|
வித்யாரம்பம் கரிஷ்யாமி ஸித்திர்பவது மேஸதா|

24. [8] ஸித்தலக்ஷ்மீர்மோக்ஷ லக்ஷ்மீ: ஜயலக்ஷ்மீஸ் ஸரஸ்வதீ|
ஸ்ரீலக்ஷ்மீர்வரலக்ஷ்மீஸ்ச ப்ரஸன்னாபவஸர்வதா|

25. ஸர்வமங்கள மாங்கல்யே சுபே ஸர்வார்த்தஸாதிகே|
சரண்யேத்ரயம்பகே தேவி நாராயணி நமோஸ்துதே|

26. [9] ஹயக்ரீவ ஹயக்ரீவ ஹயக்ரீவேதியோவதேத்|
தஸ்யநிஸ்ஸரதே வாணீ ஜன்ஹுகன்யாப்ரவாஹவத்|

27. [10] கல்யாணாத்புதகாத்ராய காமிதார்த்த ப்ரதாயினே|
ஸ்ரீமத் வெங்கடநாதாய ஸ்ரீனிவாஸாய தே நம:

28. [11] நாராயணம் நமஸ்க்ருத்ய நரம்சைவ நரோத்தமம்|
தேவீம் ஸரஸ்வதீம் வ்யாஸம் ததோஜயமுதீரயே|

29. ஆபாதமௌளிபர்யந்தம் குருணாமாக்ருதிம் ஸ்மரேத்|
தேன விக்ன: ப்ரநச்யந்தி ஸித்யந்திச மனோரதா:|

30. அப்ரமம் பங்காஹிதம் அஜடம் விமலம் ஸதா|
ஆனந்ததீர்த்தமதுலம் பஜே தாபத்ரயாபஹம்|

31. சித்ரை: பதைஸ்சகம்பீரை: வாக்யைர் மானை ரகண்டிதை:|
குருபாவம் வ்யஞ்ஜயந்திபாதி ஸ்ரீ ஜயதீர்த்தவாக்|

6 ஹனுமார். 7 ஸரஸ்வதி. 8 மகாலக்ஷ்மி. 9 ஹயக்ரீவர்.
10. வெங்கடேசன் 11 குருபரம்பரை.

210419

32. அர்த்திகல்பிதகல்போயம் ப்ரத்யர்த்திகஜகேஸரீ|
வ்யாஸதீர்த்த குருர்பூயாத் அஸ்மதிஷ்டார்த்த ஸித்தயே|

33. பக்தானாம் மானஸாம்போஜ பானவே காமதேனவே|
நமதாம் கல்பதரவே ஜயீந்த்ர குரவே நம:|

34. பூஜ்யாய ராகவேந்த்ராய ஸத்யதர்மரதாய ச|
பஜதாம்கல்பவ்ருக்ஷாய நமதாம் காமதேனவே|

35. துர்வாதித்வாந்தரவயே வைஷ்ணவேந்தீவரேந்தவே|
ஸ்ரீராகவேந்த்ரகுரவே நமோத்யயந்த தயாளவே|

36. அம்பரகங்கா சும்பிதபாத:[12]
பததள விதளித குருதரசகட:|
காளியநாகக்ஷ்வேள நிஹந்தா|
ஸரஸிஜநவதள விகஸித நயன:|

37. காலகனளி கர்புர காய:|
சரசத சகலித ஸுரரிபு நிவஹ:|
ஸந்ததமஸ்மான் பாது முராரி:
ஸததக ஸமஜவ ககபதிநிரத:|

38. வனஜாஸன ஸகஜாபதி திதிஜாரிப விநுத[13]
வினதாஸுத நிஹிதாநதஜனதாபஹ சரண|
சிதசித்தர தரமாதர தரணீதரதரபோ:
சரணம் பவ, சரணம்பவ, சரணம்பவ சரணம்|

39. சதுரானன வசனாவளி பரிபாலன நிரத
முனிதாபஸ ஜனிதாலத விபதாச்ரய புருஷ|
ந்ருப்ருகோத்தம மதிஸத்தம பயக்ருந்தன ரமண|
சரணம்பவ, சரணம்பவ, சரணம்பவபவ, சரணம்|

40. சரணாகத மரணாவ்ருத கரிணாபுருகருண|
கருடத்வஜ நதரக்ஷக ஸுரஸேவித பரம|
இதி ஸந்நுத நகக்ராஜ பயநாசககரிண:|
சரணம்பவ சரணம்பவ சரணம்பவ சரணம்|

41. பசிதாசன லவிதாகில ஜகதாம் பரிய ஹிததாம்|
கலயன் நரஸுதன்னர, வரசேதன ஸுகத|
ஹதராவண ஸுவிபீஷண சிரஜீவன வரத
சரணம்பவ, சரணம்பவ, சரணம்பவ, சரணம|

---

12 சந்துகஸ்துதி. 13 ஹரிகதா (பாட்டு ரூபக தாளம்)

பஜனை பந்ததி.

(முன் 174-ம் பக்கம் தொடர்ச்சி)

148. ராகம் தோடி—தாளம் ஆதி

தேவகி நந்தன நந்த முகுந்த (பல்)
வந்தித முனிகண நித்யாநந்த (அ-பல்)

1 நிகமோத்தார நவநீத சோர
ககபதிவாஹன ஜகதோத்தார (தேவ)

2 கம்ஸமர்த்தன கௌஸ்துபாபரண
ஹம்ஸவாஹன பூஜித சரண (தேவ)

3 மகரகுண்டலதர மோஹனவேஷ
ருக்மிணீ வல்லப பாண்டவ போஷா (தேவ)

4 சங்கசக்ரதர ஸ்ரீ கோவிந்த
பங்கஜலோசன பரமாநந்த (தேவ)

5 வரதவேளாபுர சன்னப்ரஸன்ன
புரந்தர விட்டல குணபரிபூர்ண (தேவ)

149. ராகம் முகாரி—தாளம் ஆதி

தாதா தாதா தாதா நின்ன பத (பல்)
தை தை தை தை தை யந்து குணியுவ (அ-பல்)

1 நிகமவ தந்து நகவதரி சேனெந்து
அகது பேரு பாலகன, லலஹிதோ நீ பந்து (தாதா)

2 பொடவியோரடிமாடி கோடலி பிடிதமுனி
மடிதிய ஸலஹித யனனெடய ஸ்ரீ கிருஷ்ண (தாதா)

3 கந்தேய படதந்தா மங்கள மஹிமானே
கங்களிகா நந்த கொடுவ ஹயவதனன (தாதா)

150. ராகம் தரிஞ்ஜி—தாளம் ஆதி

கைய்ய த்தோரோ கருணிகளரனே கைய்யத்தோரோ (பல்)
கையிலி தும்ப பெண்ணே கொடுவே கைய்யத்தோரோ (அ-பல்)
1 அங்குளியொளு ஹொன்னுங்கரவ நிட்டகையத்தோரோ
அங்கையலி த்வஜபத்மரேகெய கைய்யத்தோரோ (கை)
2 சிருங்காரதசங்க சக்ரவபிடித கைய்யத்தோரோ
அங்கனேயாகுச கும்பவபிடித கைய்யத்தோரோ (கை)
3 கொல்லரமனேயொளு பெண்ணேயகத்தா கைய்யத்தோரோ
மல்லிகே ஜாஜீ துருவிஞளிட்ட கைய்யத்தோரே (கை)
4 ஹல்ல பூதனிய அஸுவன்ன ஹீரித கைய்யத்தோரோ
மெல்லனே குப்ஜெய டொங்குவதித்தித கைய்யத்தோரோ (கை)
5 கடுஹிரண்யாக்ஷன கொடலனு பிதித கைய்யத்தோரோ
திருட ப்ரஹ்லாதன மண்டெயலிட்ட கைய்யத்தோரோ (கை)
6 படப்ராம்மணனுவலிதியபேடித கைய்யத்தோரோ
கொடேமாடி கிரியத்தி கோவுகள காய்த கைய்யத்தோரோ (கை)
7 பலியன்னு வஞ்சிசி தானவபேடித கைய்யத்தோரோ
வலித நரேந்த்ரகே ஸாரதியாத கைய்யத்தோரோ (கை)
8 பாஞுஸுரன பாஹுகளெளத கைய்யத்தோரோ
பானுனமரே மாடி பாவனகாய்த கைய்யத்தோரோ (கை)
9 ஏகத்வனியலி கொளலனூதுவ கைய்யத்தோரோ
நகபதி அளியக அபயவகொட்டகைய்யத்தோரோ (கை)
10 ஆகாசதலிஹ சந்த்ரன தோரித கைய்யத்தோரோ
ஸ்ரீகாந்தகுரு புரந்தரவிட்டல கைய்யத்தோரோ (கை)

151. ராகம் வராளி—தாளம் ஆதி

யந்திகே நின்ன பாதகாம்பேனு தேவ (பல்)
யந்திகே நின்னபாத, காம்பே பகுதியன்னு,
அந்தே பவபாச துண்டே தேவ (அ-பல்)
1 இந்திராதேவி நின்ன பொக்தித்தகாரண
த்வந்தகளனு காணலில்லா, தேவ (யந்)
2 பொம்மனு நின்ன மக, நம்மிசி துதிஸுவ
பொம்மக குணி குணிதாடுவ, தேவ (யந்)
3 நின்னனே ஸ்ரீ வாஸுதேவ விட்டல யன்ன
மன்னனே பஜிஸ பல்லெனு, தேவ (யந்)
(தொடரும்)

செய்திகள்.

மதுரை பகவத்கீதா ச்ரவணஸமாஜத்தின் ஆதரவில் 16—12—49 முதல் ஸ்ரீ பகவத்கீதா சிரவணமும் ஸ்ரீ கோவிந்த தாஸ ஸ்வாமிகள் பார்வையில் ஹரிபஜனையும் நடைபெறும் என்றும் அத்வைதத்தை எதிர்த்து நடவடிக்கைகளை எடுத்துவரும் மதுரை ப்ரம்மவித்யாச்ரம சபைக்கு 11—12—49உல் நடந்த தேர்தலில் ஸ்ரீமான்களான டாக்டர் சங்கர்லால் காரியதரிசியாகவும் பாரிஸ்டர் வெங்கட்டராம் அக்ராஸனராகவும் மற்றும் பல முக்யஸ்தர்கள் முக்ய நிர்வாஹகர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டதாயும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

ஸ்ரீ உத்தராதிமடம் ஸ்வாமிகளான ஸ்ரீ ஸத்யாபிக்ஞதீர்த்தரின் மகா சமாராதனையுடன் ஸ்ரீ மத்வ ஸித்தாந்த அபிவிருத்திகாரிணி சபையின் வருஷாந்தர மஹோற்சவம் ஸுதாமங்களம் நாளது ஜனவரி மீ 9, 10. 11, 12உகளில் தஞ்சை ஜில்லா மன்னார்குடிக்கடுத்த ஸ்ரீமடத்தின் நிலங்களுள்ள தென்பரைகிராமத்தில் தற்போதுள்ள ஸ்ரீ ஸ்வாமிகளான ஸ்ரீ ஸத்யப்ரமோத தீர்த்தர் அவர்களால் நேரில் நடத்தப்படுவதாய் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

திருப்பதி ஸ்ரீ மத்வஸித்தாந்த உன்னாஹினி சபையாரால் சென்ற வருஷத்தில் வித்வத் ஸம்பாவனைக்காக ரூ. 1537—0—0 பிராம்மண போஜனத்திற்காக 1745—2—10 படிப்பு கல்வி உதவி முதலானவைகளுக்கு ரூ. 186—0—0 மற்றும் இதர செலவுகளையும் சேர்த்து ரூ. 6016—5—6 செலவழித்திருக்கிறார்கள் என்றும் போக மிச்சம் கையிருப்பு மொத்தம் ரூ 68972—10—7 என்றும் அதன் ரிபோர்ட்டிலிருந்து தெரியவருகிறது. இதன் 72-வது வருஷத்திய சபைவழக்கப்படி டிசம்பர் மீ 26, 27உகளில் நடைபெற்றது.

வருடசந்தா ரூபா 3. Regd. No. M. 2419

விசேஷ தினங்கள்

13—1—50	சுக்கிரவாரம்	தனுர்மாஸ பூஜாபூர்த்தி.
14—1—50	சனிவாரம்	ஏகாதசி,உப, உத்தராயண புண்ய காலம் காலை மணி 8-20 வரை.
17—1—50	மங்களவாரம்	தர்சம், திலதர்ப்பணம்,
18—1—50	புதவாரம்	விஷ்ணுப. உப. ஸ்ரீ புரந்தர தாஸர் புண்யதினம்.
19—1—50	குருவாரம்	ச்ரவணம், உப. விஷ்ணுப. உப.
25—1—50	புதவாரம்	ரதஸப்தமி,
26—1—50	குருவாரம்	பீஷ்மாஷ்டமி.
27—1—50	சுக்ரவாரம்	ஸ்ரீ மத்வநவமி
29—1—50	பானுவாரம்	ஏகாதசி. உப.
30—1—50	சோமவாரம்	த்வாதசி. ஹரிவாஸரம் மணி 8-19க்குள் பாரணை.
2—2—50	குருவாரம்	பௌர்ணமி. விஷ்ணுப. உப.

210419

வெளிவந்துவிட்டது.

பலவருஷங்களாய் எதிர்பார்த்த ஸ்ரீராகவேந்திர ஸ்வாமிகளின் அதிஅற்புத ஜீவிய சரித்திரம், ஷெடியாரின் திவ்ய ஸ்தோத்திரம், மூலம், தேவநாகரத்திலும் தமிழிலும், அர்த்தம் தமிழிலும் சேர்ந்தது. மறுபதிப்பு முன்பதிப்பைவிட பலவிஷயங்களும் மனோரம்யமான படமும் அடங்கியது. விலை ரூ. 1
[பத்திராதிபர்]. தபால்கூலி அணா 1

Printed by N Subramania Iyer at Sri Venkateswar Power Printing Works
Edited & Published by Bhagavatha Ranganathacharier Kumbakonam.